## கல்கமுவ பிரதேச சபை

## குருநாகல் மாவட்டம்

1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 23 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 11 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜூலை 23 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடபட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கல்கமுவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பற்றாக்குறை ரூபா 1,344,747 தொகை எனினும் அதனை மிகை ஒன்றென திரண்ட நிதியக் கணக்கில் வரவு மீதியில் கழித்து நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தமையால் வருட இறுதியில் உள்ளவாறு உரிமை ரூபா 2,689,494 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. அதே போல் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் உதவி (ADB) வங்கிக் கணக்கில் வரவு மீதி ரூபா 667,136 தொகை எனினும் அவை நிதிக் கூற்றுக்களில் ரூபா 3,165,338 தொகை என ரூபா 2,498,202 மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) பொழிப்பு வருமான பதிவேடு (பி.ச.19) இன் பிரகாரம் 2014 நவம்பர் மாதத்தில் மூலதன பெறுவனவுகள் (3/80) என பெற்றிருந்த ரூபா 949,640 இற்கான மூலதனப் பெறுவனவுகள் பேரேட்டுக் கணக்கில் பதிவு செய்யப்படாமையால் ஆண்டிற்கான வருமானம் அதே தொகையால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) சம்பள மீளளிப்பு பதிவேட்டின் பிரகாரம் 2013 ஆண்டிற்காக 2014 ஆண்டின் போது பெற்றிருந்த சம்பள மீளளிப்புத் தொகை ரூபா 1,014,788 தொகை எனினும் நாட்குறிப்பு இலக்கம் 25 இன் மூலம் வருமான உதவிக் கணக்கு ரூபா 1,127,340 வரவு

வைக்கப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான வருமானம் ரூபா 85,552 இனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) நாட்குறிப்பு இலக்கம் 23 இன் மூலம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய தொகை, கடன் கொடுத்தோர்கள் என கணக்கீடு செய்யும் போது மீளாய்வாண்டிற்கான தவணைப் பணம் ஆகிய ரூபா 73,300 தொகையினை திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான செலவுகள் ரூபா 73,300 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்ததது.

(உ) 2014 ஜூன் மாதம் சட்டவறைஞர் அலுவலக கட்டடத்திற்காக பெற்றிருந்த ரூபா 2,000,000 இற்கான முன் கொடுப்பனவுப் பணம் (கீமணி) பஸ் நிலைய நுழைவுப் பத்திர விற்னவு (5-43) வருமானத் தலைப்பிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. 2014 திசெம்பர் மாதம் இந்தப் பணம் திருப்பி செலுத்தியிருந்ததுடன் அப்போது 5-43 வருமானத் தலைப்பு வரவு வைப்பதற்குப் பதிலாக உதவிநிதி, பங்களிப்பு தொகை மற்றும் மானியச் செலவு கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான வருமானம் ரூபா 2,000,000 தொகையும், ஆண்டிற்கான செலவுகள் ரூபா 2,000,000 தொகையும் மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(ஊ) உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியக் கடனிற்கான கொடுப்பனவு அறிக்கையின் பிரகாரம் ஆண்டிற்கான வட்டிச் செலவு ரூபா 1,688,154 தொகை எனினும் வட்டிச் செலவுகள் ரூபா 1,574,664 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான செலவுகள் 113,490 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(எ) 2014 ஜூலை மாத மாதாந்த ஒன்றினைந்த செலவுப் பொழிப்பு (பி.ச. 14) இன் பிரகாரம் ரூபா 103,125 இற்கான வட்டிச் செலவு வட்டிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்த போதும் அதனை ஆண்டிற்கான செலவுகள் என நிதி செயலாற்றுகை பற்றிய கூற்றிற்கு எடுக்கப்படாமையால் ஆண்டிற்கான செலவு ரூபா 103,125 இனால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டு ஆகஸ்ட்ட 21 ஆந் திகதி முதல் திசெம்பர் 31 திகதி வரை சபைக்குச் சொந்தமான பாதை தகர்க்கும் இயந்திரத்தை சேவையில் ஈடுபடுத்தல் தொடர்பாக பெற வேண்டிய ரூபா 643,580 இற்கான தொகை ஒன்று கடன் பட்டோர்கள் என இனங்கண்டு கணக்கீடு செய்யப்படாமை காரணமாக ஆண்டிற்காக வருமானம் மற்றும் வருமான கடன் பட்டோர் அதே தொகையால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) 2014 ஆண்டு தொடர்பாக மோட்டர் கிரேடர் கடன் பட்டோர் மீதி ரூபா 753,298 தொகை எனினும், அதனை ரூபா 1,881,955 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் வாடகை வருமானம் மற்றும் வருமானக் கடன்பட்டோர் ரூபா 1,128,657 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஒ) வைப்புக்களை திருப்பி செலுத்துதல் ரூபா 375,719 தொகையினை செலவுகள் என மோட்டர் கிரேடர் வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தமையால் செலவுகள் அதே தொகையால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

1.3.2 நிகழத்தக்க பொறுப்புக்கள்

---

பிரதேச சபையில் சேவையாற்றி ஓய்வு பெற்றுள்ள ஊழியர்களுக்காக உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய பங்களிப்பு தொகை மீதி ரூபா 2,200,334 ஆகும். அதே போல் சபைக்கான மாதாந்த தவணைப் பணம் என ரூபா 5,963 தொகை வீதம் அந்

நிதியத்திற்கு செலுத்தப்படுகின்ற தொகை சபையின் எந்த ஊழியர்களுக்கானது என சபை அறிந்திருக்கவில்லை.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

-----------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டின் போது இறுதி மீதிகளின் கீழ் 03 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்குகளின் பிரகாரம் மற்றும் தொடர்புடைய துணைப் பதிவேடுகளின் நேரொத்த பெறுமதியகளிடையே ரூபா 137,649 இற்கான இணக்கமின்மை காணப்பட்டது.

1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

-------------------------------------------------------------------------------------------------

(அ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 58,456,976 தொகை ஆகும். அவற்றின் அண்மித்த நூற்றிற்கு 25.85 தொகை என ரூபா 15,112,161 தொகை ஒன்று 02 வருடங்களை விட மிகையான காலம் முதல் காணப்படும் மீதியாகும். பெறவேண்டியவற்றில் முற்பணம் என ரூபா 8,977,287 இற்கான மீதி ஒன்று காணப்பட்டதுடன் அதில் மோட்டார் கிரேட்டர் வங்கிக் கணக்கிற்காக பொதுக் கணக்கில் இருந்து வழங்கியிருந்த ரூபா 8,139,113 இற்கான முற்பணக் கணக்கு ஒன்றும் அடங்குகின்றது.

(ஆ) 2104 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 86,496,277 ஆகும். அவற்றின் அண்மித்த நூற்றிற்கு 5.7 என ரூபா 4,958,698 தொகை ஒன்று இரண்டு வருடங்களை மிகைத்த காலம் முதல் காணப்படும் மீதிகளாகும். செலுத்த வேண்டிய தொகையில் ரூபா 77,410,776 இற்கான நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் மீதி ஒன்று மற்றும் ரூபா 2,726,538 வைப்பு மீதி ஒன்று காணப்பட்டது.

02. நிதி மீளாய்வு

----------------------

2.1 நிதி விளைவுகள்

---------------------------

சமர்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் செயற்பாட்டு மிகை ரூபா 7,068,186 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் செயற்பாட்டு மிகை ரூபா 7,715,293 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 647,125 இற்கான வீழ்ச்சியொன்று காணப்பட்டது. இந்த செயற்பாட்டு விளைவிற்கு ரூபா 57,814,522 இற்கான மூலதன பெறுவனவு மற்றும் ரூபா 66,217,438 இற்கான மூலதன செலவுகளை சீராக்கல் மேற்கொண்ட போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 1,334,748 இற்கான பற்றாக்குறை ஒன்றாக மாறியுள்ளது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிச் செயலாற்றுகை

--------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் வருமானமாகிய ரூபா 68,782,125 தொகையில் அண்மித்த நூற்றிற்கு 71 தொகை என ரூபா 48,849,307 தொகையும் சபையினால் உருவாக்கிய வருமானம் அல்லாத நீதிமன்றத் தண்டப் பணம்,

முத்திரைக் கட்டணம், சம்பள மீளளிப்பு போன்ற படிகள் தன்மையுள்ள பெறுவனவுகளை அடக்கியுள்ளது. அதே போல் மூலதன வருமானமாகிய ரூபா 57,814,522 இற்கான மொத்தத் தொகையும் கமநெகும, மகநெகும போன்ற மூலங்களின் மீது வேறு நிறுவனங்களின் மூலம் அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி விடயங்களுக்கு கிடைக்கப்பெற்ற பணத்தினை அடக்கியுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவு ஆகிய ரூபா 61,713,956 தொகையில் மொத்தமாக நூற்றிற்கு 60.2 என ரூபா 37,188,016 தொகை தனிப்பட்ட சம்பளங்களுக்கான செலவுகளாகக் காணப்பட்டதுடன் அவற்றில் அண்மித்த நூற்றிற்கு 96.6 என ரூபா 35,932,774 தொகை சம்பள மீளளிப்பு என உள்ளூராட்சி ஆணையாளரிடம் கிடைக்கப்பெற்று ஏனைய வருமானங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதே போல் மூலதன செலவு ஆகிய ரூபா 66,227,438 தொகையில் அண்மித்த நூற்றிற்கு 87.3 என ரூபா 57,814,522 தொகை கமநெகும, மகநெகும போன்ற மூலங்களின் மீது வேறு நிறுவன ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி விடயங்கள் அடக்கியிருந்தது.

2.3 வருமான நிருவாகம்

---------------------------------

2.3.1 வாடகை

-------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆதனங்கள் வாடகை கொடுத்தலின் கீழ் 1994 ஆண்டு தொடர்பாக ரூபா 117,615 தொகையும் 2009 ஆண்டு தொடர்பாக ரூபா 16,755 தொகையும் 2011 ஆண்டு தொடர்பாக ரூபா 367,284 தொகையும் 2012 ஆண்டு தொடர்பாக ரூபா 189,105 மற்றும் 2013 ஆண்டு தொடர்பாக ரூபா 276,876 உம் ஆக கூட்டுத்தொகை ரூபா 967,635 இற்கான நிலுவை வாடகை ஒன்று காணப்பட்டது.

(ஆ) முற்கொடுப்பனவு முறையில் வழங்கப்பட்டிருந்த கல்கமுவ பொதுச் சந்தையின் 22 கடைகளில் 11 கடைகள் தொடர்பாக மாதாந்த தவணைப் பணம் 29-34 இடையே வீச்சில் கூட்டுப் பெறுமதி ரூபா 304,400 இற்கான கடை வாடகை நிலுவை ஒன்றும் கல்கமுவ பஸ்நிலைய தரை மாடியில் 06 கடைகள் தொடர்பாக ரூபா 129,810 நிலுவை கடை வாடகை ஒன்றும் காணப்பட்டது.

(இ) பஸ் நிலையத்திலுள்ள புதிய கடைகளை நிர்மாணிக்கும் போது அகற்றப்பட்டிருந்த பழைய கடைகள் இலக்கம் 81 முதல் இலக்கம் 99 வரை தொடர்பாக 2012 ஆண்டு வரை நிலுவை வாடகை ரூபா 21,180 தொகையினை அறவீடு செயற்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.3.2 இயந்திர வாடகை

------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு இறுதி வரை மோட்டார் கிரேட்டர் வாடகைக்கு கொடுத்ததன் மூலம் 2009 ஆண்டு முதல் 2014 ஆண்டு வரை ரூபா 2,860,267 தொகை ஒன்று அறவிடப்பட வேண்டியிருந்தது. அவற்றில் ரூபா 1,502,646 தொகை ஒன்று சபையின் நிர்மாண வேலைகள் தொடர்பாக மோட்டார் கிரேட்டர் கணக்கிற்கு மாற்றுவதற்காக காணப்பட்ட பெறுமதி ஒன்றாகும்.

(ஆ) சபைக்குச் சொந்தமான பாதை தகர்க்கும் இயந்திரம் தொடர்பாக மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 1,499,554 நிலுவை ஒன்று காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 457,940 வெளிசாரார்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்தது. அதே போல் JCB இயந்திரம் வாடகைக்கு கொடுத்தல் தொடர்பாக மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 2,680,837 அறவிடப்பட வேண்டியிருந்தது.

03. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

---------------------------------------------------------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 100 ஆக காணப்பட்டதுடன் உள்ளவாறான பதவியணி 119 ஆகக் காணப்பட்டமையால் மிகை பதவியணி 24 உம் மற்றும் வெற்றிடங்கள் 05 காணப்பட்டது. அவற்றில் செயலாளர் பதவி மற்றும் 03 நூலக பொறுப்பு அதிகாரி பதவிகளில் 01 வெற்றிடமாக காணப்பட்டதுடன் 19 அபிவிருத்தி அலுவலர் பதவிகள் மிகையாக காணப்பட்டது.

3.2 குறைபயன்பாட்டு சொத்துக்கள்

--------------------------------------------------

இலக்கம் 49-1976 கொண்ட மினி குபேட்டா டிரக்டர் 05 வருட காலம் முதல் பயன்படுத்தப்படாது காணப்பட்டது.

3.3 ஒப்பந்த நிருவாகம்

-------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கமநெகும 2014 ஏற்பாடுகளின் கீழ் செயற்படுத்துவதற்காக திட்டமிட்டிருந்த ரூபா 5,775,000 பெறுமதியான 31 நிர்மாண வேலைகளும் தெயட கிருள அபிவிருத்தி ஏற்பாடுகளின் மீது 2014 ஆண்டின் போது செயற்படுத்துவதற்கு திட்டமிட்டிருந்த வலஸ்வெவ பூ அரசன் குளம் நீர்ச் செயற்திட்டமும் செயற்படுத்தியிருக்கவில்லை. அத்துடன் வீட்டிற்று வீடு ஊருக்கு ஊர் பொருளாதார அபிவிருத்திக்காக தேசிய திட்டம் 2014 ஏற்பாடுகளின் மீது ஒப்பந்தங்கள் வழங்கியிருந்த ரூபா 500,000 இற்கான 04 நிர்மாண வேலைகள் 2014 ஆண்டின் போது செயற்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) ஒரு ஊருக்கு ஒரு வேலை ஏற்பாடுகளின் மீது ரூபா 990,099 இற்கான மதிப்பீட்டு தொகையின் கீழ் மஹானான்னேரிய தெற்கு கீழ் தும்புலுவாவ முதல் மஹதும்புலுவாவ வரையான பாதையை கொங்கிரீட் பண்ணும் நிர்மாண வேலை செயற்படுத்தப்பட்டிருந்ததுடன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த ரூபா 49,490 இற்கான 02 வேலைப் பகுதிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என 2015 மார்ச் 19 திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

04. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுமையும்

-----------------------------------------------------------------

பாதீட்டுக் கட்டுப்பாடு

---------------------------------

மீளாய்வாண்டு தொடர்பகாக பாதீட்டின் பிரகாரம் ரூபா 87,233,564 இற்கான மீண்டுவரும் வருமானம் மற்றும் ரூபா 78,000,000 இற்கான மூலதன வருமானம் ஒன்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அவற்றில் நெருங்கியிருந்தது. மீண்டுவரும் வருமானத்தின் கீழ் அண்மித்த நூற்றிற்கு 79 என ரூபா 68,782,125 தொகை மற்றும் மூலதன வருமானத்தின் கீழ் அண்மித்த நூற்றிற்கு 79 எனும் ரூபா 57,814,522 மாத்திரமே. அதே போல் சபையினால் உருவாக்கப்பட்ட வருமானத்தின் கீழ் மதிப்பீட்டு வருமானம் ரூபா 29,454,120 ஆகக் காணப்பட்டதுடன் அறவிடப்பட்டிருந்த வருமானம் ரூபா 19,932,817 ஆகும்.

05. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) நிதிக் கட்டுப்பாடு

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) ஒப்பந்த நிருவாகம்